பெயர் : 　　　　　　　　　　　　　　　　　　　　　　　　　　திகதி :

# வரலாறு ஆண்டு 5

**<u>சுதந்திரத்திற்குப் போராடிய தலைவர்களை விவரங்களுக்கு ஏற்ப இணைத்திடுக.</u>** ( பாடநூல் பக்கம் 78-79 )

### துன் தான் செங் லோக் (Tun Tan Cheng Lock)

- 1945ஆம் ஆண்டு 'ஆல் மலாயன் கொன்சில் ஓப் ஜோயிண்ட் ஆக்ஷன்'இன் (AMCJA) தலைவர்.
- 1949ஆம் ஆண்டின் மலாயன் சீனர் சங்கத்தின் (மசீச) முதல் தலைவராவார்.
- மசீச, அம்னோவோடு இணைந்து கூட்டணிக் கட்சி உருவாகக் காரணமானவர்.
- சீனச் சமூகத்தினரிடையே நாட்டின் மீது விசுவாச உணர்வை விதைத்தவர்.



### துன் அப்துல் ரசாக் பின் டத்தோ உசேன் (Tun Abdul Razak bin Dato' Hussein)

- லண்டன் சென்ற கூட்டரசு மலாயாச் சுதந்திரக் குழுவின் உறுப்பினர்.
- 1956ஆம் ஆண்டு ரசாக் அறிக்கையை அறிமுகப்படுத்தியவர்.
- 1957ஆம் ஆண்டு கூட்டரசு மலாயாவின் முதலாவது துணைப் பிரதமர்.
- மலாய்மொழியைப் பயிற்று மொழியாக்கியவர்.



### டத்தோ அப்துல் வாஹாப் பின் தொ மூடா அப்துல் அசிஸ் (Dato' Abdul Wahab bin Toh Muda Abdul Aziz)

- மலேயன் யூனியனின் உருவாக்கத்தை எதிர்த்தவர்.
- 1946ஆம் ஆண்டின் அம்னோவின் முதலாவது பொதுச் செயலாளர்.
- 1956ஆம் ஆண்டில் லண்டன் சென்ற கூட்டரசு மலாயாவின் சுதந்திரக் குழுவில் மலாய் அரசர்கள் நிகராளியாகச் சென்றார்.
- முதலாவது பேராக் மந்திரி பெசார் ஆவார்.



### துன் எச்.எஸ்.லீ (Tun H.S. Lee)

- 1949ஆம் ஆண்டின் சிலாங்கூர் மாநில மசீச கட்சியின் தலைவர்.
- அம்னோ-மசீச ஒத்துழைப்பை முன்னெடுத்த தலைவர்.
- இனங்களிடையே ஒற்றுமையை வளர்க்க முற்பட்டவர்.
- 1956ஆம் ஆண்டு லண்டன் சென்ற கூட்டரசு மலாயாவின் சுதந்திரக் குழுவின் உறுப்பினர்.
- கூட்டரசு மலாயாவின் முதல் நிதி அமைச்சர்.



### துன் வீ.தி. சம்பந்தன் (Tun V.T. Sambanthan)

- 1955ஆம் ஆண்டின் மலாயன் இந்தியர் காங்கிரஸின் (மஇகா) 5ஆவது தேசியத் தலைவர்.
- 1957ஆம் ஆண்டு சுதந்திரக் குழுவில் பங்கேற்றார்.
- கூட்டரசு மலாயாவின் முதல் நலத்துறை அமைச்சர் ஆவார்.



### துன் டாக்டர் இஸ்மாயில் பின் டத்தோ அப்துல் ரஹ்மான் (Tun Dr. Ismail bin Dato' Abdul Rahman)

- 1951ஆம் ஆண்டின் அம்னோவின் துணைத் தலைவர்.
- 1951-1952 ஆம் ஆண்டில் கூட்டணிக் கட்சி உருவாக்கத்தில் மசீசவுடன் பேச்சுவார்த்தை நடத்திய அம்னோவின் நிகராளி.



LIVEWORKSHEETS